வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் லிமிட்டட் கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் மீளாய்வாண்டினது கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் ரூபா 106,561,153 கிரயமுடைய 09 சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகிய போதும், அவற்றின் பயனுள்ள ஆயுட் காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிரூபணமாகவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சில கட்டிடங்கள், மின்சார உபகரணங்கள், பொறித்தொகுதி, இயந்திரம் என்பவற்றினது கம்பனியின் தேய்மானக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்களது நிகர பெறுமதி பூச்சியமாக இருத்தல் வேண்டுமாயினும், நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் அச் சொத்துக்களின் நிகர பெறுமதி ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 14,198,924 ஆகவிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சில கட்டிடங்கள், மின்சார உபகரணங்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திரம் என்பவற்றினது கிரயத்திற்கும் அதிகமாக ரூபா 10,458,896 தேய்மான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக, மீளாய்வாண்டின் இறதியில் உள்ளவாறான நடைமுறை அல்லாத சொத்துக்களது பெறுமதி அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித சொத்துக்களுக்குரிய தேய்மானத்தைக் கணிப்பிடுவதில் ஏற்பட்ட தவறு காரணமாக ரூபா 917,410 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரியைக் கணிப்பிடுகையில் ஏற்பட்ட தவறு காரணமாக ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ஆண்டிற்குரிய வரிக்கான நிதியேற்பாடு ரூபா 4,100,596 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) கட்டிடங்களைத் திருத்தஞ் செய்கையில் செலவிடப்பட்ட ரூபா 346,601 மூலதனச் செலவினம் மூலதனப்படுத்தாது மீண்டுவரும் செலவினமாகச் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக, நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ஆண்டிற்கான இலாபம் மற்றும் சொத்துக்கள் என்பன அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் மூலம் பணிக்கப்பட்டவாறு பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) மேற்படி அபிப்பிராயத்திற்கான அடிப்படை, நோக்கெல்லை மற்றும் வரம்புகள்

(ஆ) எனது அபிப்பிராயமாவது

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல் என்பவற்றை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது பரிசோதனையிலிருந்து தென்படும் விதத்தில் கம்பனி முறையான கணிப்பீட்டு அறிக்கைகளைப் பேணியுள்ளது.

- கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காணப்படும் தேவைகளுக்கு இணங்கியுள்ளன.

**2.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

சீ.ஐ.சீ கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 4,569,250 கடன்பட்டோர் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியாகிய ரூபா 2,289,250 மீதி தீர்வு செய்யப்படாதிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 395 | நடைமுறைக் கணக்கு ஒன்றினது வங்கிக் கணக்கிணக்கக் கூற்ற தயாரிக்கப்படவில்லை. |
| (ஆ) 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிப் பெறுபேறு ரூபா 25,305,645 மிகையாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,533,931 ஆகும். இதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 35,839,576 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. உற்பத்திகளும் விற்பனைகளும் அதிகரித்தமையே இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

**3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

| | **2016/17** | **2017/18** |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1:8 | 1:11 |
| மொத்த இலாப விகிதம், நூற்றுக்கு | 32 | 39 |
| நிகர இலாப விகிதம், நூற்றுக்கு | (8) | 8 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்புகள் மற்றும் குறுகிய கால திறைசேரி உண்டியல்களின் மீதியாக ரூபா 236,738,858 நடைமுறைச் சொத்தில் உள்ளடங்கியமை நடைமுறைச் சொத்து விகிதம் 1:11 ஆக இருப்பதற்கான பிரதான காரணமாக அமைந்தது.

(ஆ) விற்பனை மற்றும் உற்பத்திகளின் அளவு அதிகரிப்பானது நிகர இலாப அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்ததுடன், உற்பத்தி மேந்தலைச் செலவினமாகிய ரூபா 19,129,460 நிர்வாகச் செலவினத்தில் உள்ளடங்கியமை மொத்த இலாப விகித அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

உற்பத்தி, விற்பனையை அதிகரித்தல், புதிய சந்தைகளை இனங்காணுதல், அந்நியச் செலாவணியை சேமித்தல், புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உயர்தர சேவையினை வழங்குதல் என்பவற்றை நோக்காக் கொண்டு ரூபா 38.9 மில்லியன் மதிப்பீட்டிலான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய செயலாற்றல் கூற்றைத் தயாரித்துச் சமர்ப்பித்திருந்ததுடன் நிதிச் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. செயல் நடவடிக்கைத் திட்டத்தின் 10 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், ஆண்டின்போது பௌதீக முன்னேற்றம் எதனையும் அடைந்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ)

(i) ஆறு சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வியாபித்துள்ள பொஸ்பேட் படிவம் 60 மில்லியன் மெற்றிக் தொன் சுற்றோட்டத்தைக் கொண்டுள்ளதாக பூகற்பவியல், சுரங்க பணியகத்தின் தகவல்கள் மூலம் தெரிய வந்தது. இதனை நாட்டின் அபிவிருத்திக்கு அதிகூடிய விகிதத்தில் பயன்படுத்தியிராததுடன், அதிகூடிய ஆற்றலைப் பயன்படுத்தக் கூடிய பல சந்தர்ப்பங்களில் பொஸ்பேட் கம்பனி செயற்திட்ட முன்மொழிதலைச் சமர்ப்பித்திருந்தபோதும், மூலதனத்தைப் பெறுவதில் ஏற்பட்ட சிக்கலால் அவற்றை அமுலாக்க முடியவில்லை.

(ii) கம்பனியானது 2018 ஆம் ஆண்டில் சீசோஸ் பெர்டிலைசர் (பிறைவேட்) லிமிடெட் எனும் அவுஸ்திரேலிய கம்பனியுடன் இணைந்து பொஸ்பேட் படிவம் சம்பந்தமாக தொழில் நுட்ப பதிப்பாய்வு ஒன்றை மேற்கொண்டு, வருடாந்தம் 300,000 மெற்றிக் தொன் எப்பாவல ரொக் பொஸ்பேட்டை பெற்று, சிங்கல் சுப்பர் பொஸ்பேட்டை உற்பத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை தற்போது ஆரம்பித்துள்ளது. எவ்வாறாயினும், அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் என்பன பெறப்படாமையால் செயற்திட்டத்தை அமுலாக்க முடியாதிருந்தது.

(iii) நாட்டில் சுப்பர் பொஸ்பேட்டை உற்பத்தி செய்வதற்கான ஆற்றல் மற்றும் வளம் என்பன இருக்கையில், சுப்பர் பொஸ்பேட்டை இறக்குமதி செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் 1,276,500 அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய

வேலைகளுக்கு சல்பூரிக் அமிலத்தை இறக்குமதி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 100,701,249 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தென்னை உரம் சம்பந்தமான செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் ரூபா 72 மில்லியன் தென்னை உர வருமானத்தையும் நிகர இலாபமாக ரூபா 10 மில்லியன் உடன் ஏனைய நேரடி விற்பனை வருமானம் ரூபா 12.75 மில்லியன் மற்றும் ரூபா 2.12 மில்லியன் நிகர இலாபமும், அவற்றிற்கு புறம்பாக வருடாந்த வருமானத்தை 10 சதவீதம் அதிகரிப்பதற்கும் நெடுந் தவணையில் வருடாந்தம் 3,000 மெற்றிக் தொன்னை சந்தைக்கு வழங்குவதன் மூலம் 10 சதவீத சந்தைப் பங்கை கைப்பற்றும் எதிர்பார்ப்புடன் இந்தச் செயற்திட்டத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகள் 2014 பெப்ரவரி 14 தொடக்கம் அமுலாக்கப்பட்டிருந்தது. அதற்கென ரூபா 21,226,633 மூலதனச் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015/2016 ஆம் ஆண்டு நீங்கலாக ஏனைய சகல ஆண்டுகளிலும் நட்டமே ஏற்பட்டிருந்தது.

**4.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எப்பாவல வளாகத்தில் புதிய ஆலை இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கு 2014 ஆம் ஆண்டில் ரூபா 11,513,434 பெறுமதியான (mill base) துணைப்பாகம் அடங்கலாக ரூபா 43,453,115 க்கான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், 2018 யூலை 31 வரை அந்தத் துணைப்பாகங்கள் நிறுவப்படவில்லை. அதன் காரணமாக, ரூபா 21,866,371 பெறுமதியான உதிரிப்பாகக் கையிருப்பு எஞ்சியிருந்தன. வேறு பணிகளுக்கு பயன்படுத்த முடியாத ரூபா 11,513,434 பெறுமதியான mill base துணைப்பாகத்திற்கு வருடாந்தம் ரூபா 2,302,678 வீதம் இழப்பீட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) லங்கா பொஸ்பேட் கம்பனி 2008 பெப்ரவரி 03 ஆந் திகதியன்று ரூபா 7,901,000 க்குக் கொள்வனவு செய்த வீல்லோடர் ஒன்று அகழ்வு வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட 129 இயந்திர மணித்தியாலங்களின்போது ஹைடிரோலிக் முறைமை சிதைவடைந்து பயன்படுத்தப்பட முடியாது போனது. அது 2015 தொடக்கம் 2017 வரை முற்றாகவே பயன்படுத்தப்படாதிருந்தது. இயந்திரம் நிரந்தரமாகவே செயலற்றுப் போவதன் காரணமாக பயனுள்ளவாறு பயன்படுத்தப்படாத இயந்திரம் குறைவான பயன்பாட்டுக்குள்ளாகியிருந்தது.

(இ) 2016 ஆகஸ்ட் தொடக்கம் உற்பத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 34,654,178 பெறுமதியான கிரஷர் இயந்திரத்தைப் பயன்படுத்துகையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது செயலற்றுப் போனது. அதற்கமைய, 2016 ஆகஸ்ட் தொடக்கம் 2018 யூலை வரை இயந்திரப் பாவனையின்போது நிரந்தரமாகவே ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு மற்றும் பயன்படுத்துவதில் உள்ள சிக்கல் என்பவற்றால் 15 மாதங்களுக்கு மாத்திரமே அது செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், இயந்திரம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியின்போது உற்பத்தி 9,482 மெற்றிக் தொன் எனும் குறைந்த அளவில் அமைந்திருந்தது.

**5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி**

**நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியை அடைதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டும். மீளாய்வாண்டில் பொஸ்பேட் கம்பனி தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்டவாறு 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்து கொண்டதையடுத்து இலங்கை பொஸ்பேட் கம்பனி குறித்த பரப்பெல்லைக்குள் அமைய அடைய வேண்டிய நோக்கங்களாக எஸ்எஸ்பீ, தென்னை உரம், இறப்பர் உரம், கொம்பேஸ்ட் உரம் என்பவற்றை உற்பத்திப் பொருட்களாக இனங்கண்டு கொண்டிருந்தது.

(இ) நிலைத்து நிற்கவல்ல இலக்கை அடைவதற்குத் தயாராகும்போது சில நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பு இல்லாததால் இலக்கிடப்பட்ட நோக்கத்தை அடைவதற்கான திட்டத்தைத் தயாரிக்கையிலும் முன்னரே தயாராகும்போதும் செயற்பாடுகள் நலிவடைந்த நிலைமையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

2005 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ/27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச கம்பனிகளும் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 2018 யூன் 21 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | இணங்காமை |
| --- | --- |
| (அ) கையிருப்புக் கட்டுப்பாடு | மூலப்பொருள் கையிருப்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு நிச்சயமான விதிமுறைமைகள் இணங்காணப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | கூடிய பெறுமதி உடைய கொடுக்கல் வாங்கல்களுக்கு கொடுப்பனவை வழங்குவதற்கு முன்னர் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் பரிசீலனை மேற்கொள்ளப்படாததுடன், விசேட பணிக்கொடைக் கொடுப்பனவின்போது விற்பனைக் கூறு அடிப்படையாகக் கொள்ளப்படாமையும். |
| (இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோரிடமிருந்து தாமதமின்றி அறவீடுகளை மேற்கொண்டு அவற்றைச் சரிவர கணக்கிலிடாமை. |
| (ஈ) தகவல் தொழில்நுட்ப | முன்னைய மாதச் சம்பளத் தகவல்களை |

| | | |
|---|---|---|
| | முறைமைக் கட்டுப்பாடு | முறைமையின் மூலம் அறிய முடியாதிருப்பதும் கொள்வனவுக் கட்டளைகளுக்கு முறைமையைப் பயன்படுத்தாமையும் தென்னை உரச் செயற்திட்டக் கணக்கீட்டு நடவடிக்கை, கையிருப்புக் கட்டுப்பாடு, விற்பனை என்பன தொடர்பாக நிறுவப்பட்ட முறைமையை முறையாகப் பயன்படுத்தாமையும் |
| (உ) | பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் | சில பொருட் கொள்வனவுகளுக்குத் தொழில்நுட்பக் பகுப்பாய்வுக் குழுக்கள் நியமிக்கப்படாமை. |